RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 145 | மே.31, 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# ''போக்குவரத்து தொழிற்சங்கத்தினர் கோரிய ஊதிய உயர்வை வழங்க வேண்டும்'': டிடிவி தினகரன்



சென்னை: மே.31-

ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து போக்குவரத்து தொழிற்சங்கத்தினர் கோரிய ஊதிய உயர்வை வழங்குவதோடு, ஓய்வூதியதாரர்களுக்கு பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கும் பணப்பலன்களையும் உடனடியாக விடுவிக்க முன்வர வேண்டும் என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "தமிழக அரசின் போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் தலைமையில் நேற்று நடைபெற்ற போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கான 15வது ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையை தி.மு.க கூட்டணி தொழிற்சங்கமான சி.ஐ.டி.யூ உட்பட 30க்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் புறக்கணித்திருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

15 முதல் 20 சதவிகிதம் வரை ஊதிய உயர்வு கோரிய தொழிற்சங்கத்தினருக்கு வெறும் 6 சதவிகிதம் மட்டுமே ஊதிய உயர்வு வழங்கியதோடு, ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு 22 மாதங்களாக வழங்கப்படாமல் இருக்கும் பணப்பலன் குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அரசு தரப்பிடம் இருந்து எந்தவித பதிலும் கிடைக்காததே பேச்சுவார்த்தையை புறக்கணிக்க முக்கிய காரணமாகவும் அமைந்திருக்கிறது.

அதிலும், 01.09.2023 முதல் 6 சதவிகிதம் ஊதிய உயர்வு நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதாக அறிவிப்பு வெளியிட்டிருக்கும் நிலையில், மொத்தமாக வழங்க வேண்டிய 21 மாத நிலுவைத் தொகையில் 12 மாத நிலுவைத் தொகையை வழங்க முடியாது எனவும் அமைச்சர் கூறியிருப்பது ஒட்டுமொத்த போக்குவரத்து தொழிலாளர்களையும் வஞ்சிக்கும் செயலாகும்.

பொதுமக்களுக்கு சேவை வழங்கும் நோக்கத்தில் தொடங்கப்பட்டிருக்கும் போக்குவரத்துக் கழகத்தில் ஏற்படும் நஷ்டத்தை காரணம் காட்டி, பண்டிகை காலங்களிலும் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றும் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய பணப்பலன்களை வழங்க மறுப்பது கடும் கண்டனத்திற்குரியது.

எனவே, ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து போக்குவரத்து தொழிற்சங்கத்தினர் கோரிய ஊதிய உயர்வை வழங்குவதோடு, ஓய்வூதியதாரர்களுக்கு பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கும் பணப்பலன்களையும் உடனடியாக விடுவிக்க முன்வர வேண்டும் என போக்குவரத்துக் கழகத்தையும் தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# ரிசர்வ் வங்கியின் நகைக்கடன் கட்டுப்பாடுகள் கூட்டுறவு வங்கிகளை பாதிக்காது: அமைச்சர் பெரியகருப்பன் தகவல்



சென்னை: மே.31-

நகைக்கடன் குறித்த ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாடுகள் கூட்டுறவு வங்கிகளை வெகுவாக பாதிக்காது என்று அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.

சென்னை தீவுத்திடலில் புதிதாக அமையவுள்ள ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகத்துக்கான பூர்வாங்கப் பணிகளை நேற்று காலை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார். சென்னை, தீவுத்திடல், சத்தியவாணி முத்து நகரில் 4 தளங்களுடன் 19,464 சதுர அடி பரப்பளவில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகம் கட்டப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து, தலைமைச்செயலகத்தில் கூட்டுறவுத்துறை தொடர்பான ஆய்வுக்கூட்டம் அமைச்சர் பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில், துறை செயலர் சத்யபிரத சாஹூ உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

அப்போது செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது: இந்த ஆண்டும் விவசாயிகளுக்கு வழங்கும் கடன், நகைக்கடன், மகளிர் சுயஉதவிக் கடன், விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்குவதையும் கடந்து கால்நடைக்கடன் வழங்குவதற்காக, "விவசாயிகளுக்கு பலம் கால்நடைகள்" அவற்றை பராமரிப்பதற்கு, புதிதாக வாங்குவதற்கு என கடன்கள் வழங்கப்பட்ட உள்ளது அதனை அவர்கள் உரிய காலத்தில் திருப்பி செலுத்தினால் வட்டியில்லாக் கடனாக வழங்க உள்ளது.

இந்த ஆண்டு ரூ.17 ஆயிரம் கோடிக்கு பயிர் கடன் வழங்க முதல்வர் அறிவுறுத்தியுள்ளார். தற்போது நகைக்கடன் தொடர்பாக, ரிசர்வ் வங்கி விதித்து இருக்கும் கட்டுப்பாடுகள் பாதிக்கும், ஆனால் இது கூட்டுறவு வங்கிகளை வெகுவாக பாதிக்காது. விலைமதிப்பில் 75 சதவீதம் கொடுக்கலாம் என்று சொல்கின்றனர். அதை தான் நாம் செய்துகொண்டு இருக்கிறோம். ஆனால், இது ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்களை இது வெகுவாக பாதிக்கும். இதனால் தான் முதல்வர் ஸ்டாலின், மத்திய நிதியமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நகைக் கடன் கட்டுப்பாடுகளை தளர்த்த ரிசர்வ் வங்கிக்கு மத்திய அரசு பரிந்துரை!

சென்னை, மே.31-

வங்கிகள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்களில் தங்க நகைக் கடன் பெறுவது தொடர்பான கட்டுப்பாடுகளை தளர்த்த ரிசர்வ் வங்கிக்கு மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையிலான நிதி அமைச்சகம் பரிந்துரை செய்துள்ளது.

தங்கம் ஆடம்பர பொருளாக மட்டும் அல்லாமல், மக்களின் அவசர பணத் தேவையை பூர்த்தி செய்கிறது. குறிப்பாக வங்கிகளில் தங்க நகைகளை அடமானமாக வைத்து குறைந்த வட்டியில் மக்கள் எளிதில் கடன் பெற முடியும். இந்நிலையில், ரிசர்வ் வங்கி சமீபத்தில் வங்கிகள் மற்றும் வங்கிசாரா நிதி நிறுவனங்கள் தனிநபர்களுக்கு தங்க நகைக் கடன் வழங்குவது தொடர்பான 9 புதிய விதிமுறைகள் அடங்கிய வரைவு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த வரைவு அறிக்கை இந்தியா முழுவதும் நகைக் கடன் சார்ந்து பல்வேறு சந்தேகங்களை எழுப்பியது. ரிசர்வ் வங்கியின் இந்த புதிய கட்டுப்பாடுகளுக்கு அரசியல் கட்சி தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். நகைக் கடன் சார்ந்த கட்டுப்பாடுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என தமிழக முதல்வர் ஸ்டாலின், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு அண்மையில் கடிதம் எழுதி இருந்தார். இந்நிலையில், நிதி அமைச்சகம் நகைக்கடன் பெறுவது தொடர்பான கட்டுப்பாடுகளை தளர்த்த ரிசர்வ் வங்கிக்கு சில பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

அதன்படி, ரூ.2 லட்சத்துக்கும் குறைவாக கடன் வாங்குவோருக்கு புதிய விதிமுறைகளில் இருந்து விலக்கு அளிக்கலாம் என நிதி அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது. மேலும், இதுபோன்ற புதிய விதிமுறைகளை கள அளவில் செயல்படுத்துவதற்கு கால அவகாசம் தேவைப்படும். அதனால் ஜனவரி 1, 2026 முதல் இந்த விதிமுறைகளை செயல்படுத்தலாம் என நிதி அமைச்சகம் பரிந்துரை செய்துள்ளது.

வரைவு வழிகாட்டுதல் குறித்து பெறப்பட்ட கருத்துகளை ரிசர்வ் வங்கி மதிப்பாய்வு செய்து வருவதாகவும் நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதை எக்ஸ் தள பதிவில் நிதி அமைச்சகம் பகிர்ந்துள்ளது.

# உற்பத்தி துறையில் உலகளவில் சாதனைகளைப் படைத்து நாட்டுக்கே வழிகாட்டும் தமிழகம்: அரசு பெருமிதம்



சென்னை: மே.31-

உற்பத்தி துறையில் உலகளவில் சாதனைகளைப் படைத்து நாட்டுக்கே தமிழ்நாடு வழிகாட்டுவதாக தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டின் வெற்றிப் பாடங்களைப் பின்பற்றினால், இந்தியா விரைவில் உற்பத்தித் துறையில் உலகளாவிய சக்தியாக உருவெடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில், "2014-™ 'Make in India' திட்டம் தொடங்கப்பட்டபோது, 2025க்குள் உற்பத்தித் துறையின் பங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 25% ஆக உயர்த்துவதை இலக்காக நிர்ணயம் செய்தது. ஆனால் தற்போது வரை 16% சதவீதம் எட்டப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ்நாடு மட்டும் தன் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 25% உற்பத்தித் துறையிலிருந்து பெற்று நாட்டிற்கே வழிகாட்டும் மாநிலமாக உள்ளது.

உலகத் தரத்தில் உற்பத்தி மையம்: தமிழ்நாட்டில் ஃபாக்ஸ்கான், பெகாட்ரான், சாம்சங், ஹுண்டாய், ஃபோர்ட், நிஸான், டிவிஎஸ் மோட்டார் நிறுவனம், அசோக் லேலண்ட் போன்ற உலகளாவிய பெருநிறுவனங்களின் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன.

உலகளவில் புகழ்பெற்ற ஆப்பிள் (Apple) போன்களை தயாரிக்கும் நிறுவனங்களில் 50,000க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பல லட்சக்கணக்கான ஐபோன்களை உற்பத்தி செய்கின்றனர். அதேபோல், நைக் (Nike) நிறுவனத்திற்கான பொருள்களைத் தயாரித்து வழங்குவதில் முதன்மை நிறுவனமாக இருக்கும் ஃபெங் டே (Feng Tay) நிறுவனம் 37,000 பணியாளர்களுடன் பல தொழிற்சாலைகளை இயக்குகிறது. தமிழ்நாட்டில் மொத்தமாக 31,000க்கும் மேற்பட்ட செயல்பாட்டில் உள்ள தொழிற்சாலைகள் உள்ளன, இதுதான் இந்தியாவில் அதிகமான எண்ணிக்கை ஆகும்.

இந்தியாவிலேயே ஏற்றுமதியில் முன்னணியில் நிற்கும் தமிழ்நாடு: தமிழ்நாடு ஆடைகள், வாகன உற்பத்தி, பொறியியல் பொருட்கள் மற்றும் மின்னணு சாதனங்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதுல் இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக உயர்ந்துள்ளது. இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 6% க்கும் குறைவாக இருந்தாலும், எண்ணெய் அல்லாத பொருட்களில்ன் ஏற்றுமதியில் 15% பங்கைத் தமிழ்நாடு வகிக்கிறது.

இந்தியாவின் 41% மின்னணு சாதனப் பொருட்கள், 38% காலணிகள் மற்றும் 45% வாகனம் மற்றும் வாகன உதிரிபாகங்கள் தமிழ்நாட்டில் இருந்தே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டின் உற்பத்தி துறையின் சிறப்பான வளர்ச்சியினால் இந்தியாவில் 9.69 விழுக்காடு மாநில உள்நாட்டு உற்பத்தியை உயர்த்தி நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக இருக்கிறது.

தமிழ்நாட்டின் வெற்றிக்கான முக்கிய காரணிகள்: உள்கட்டமைப்பு மற்றும் தொழில்துறைக் கிளஸ்டர்கள்: இந்த சாதனைகள் ஓரிரவில் நடந்தது அல்ல. மாநில அரசு தொடர்ந்து துறைமுகங்கள் (சென்னை, தூத்துக்குடி போன்றவை), சாலை வலையமைப்புகள் மற்றும் தொழிற்துறை நிலங்களில் முதலீடு செய்துள்ளது. 1971 ஆம் ஆண்டு திமுக அரசால் நிறுவப்பட்ட SIPCOT (தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம்) தொழிற்பூங்காக்களை உருவாக்கி, தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பை உற்பத்திதுறை தேசிய அளவில் பிரபலமாகும் முன்பே உயர்த்தியிருந்தது.

இதனால், முதலீட்டாளர்கள் வருவதற்கு முன்பே அவர்களுக்கான நிலம் மற்றும் அடிப்படை வசதிகள் தயாராக இருந்தன. கோயம்புத்தூர் (பொறியியல் பொருட்கள்), சென்னை (வாகனங்க), திருப்பூர் (துணிகள்) போன்ற நகரங்கள் சிறப்புத் துறை மையங்களாக உருவெடுத்தன.

முதலீட்டாளர்களுக்கு அரசின் ஆதரவு: தமிழ்நாடு அரசின் Guidance Tamil Nadu என்பது ஒரு முழுச் சேவை முதலீட்டு மையமாகும். பல மாநிலங்களில் "ஒற்றை சாளர அனுமதி", "முதலீட்டாளர் மாநாடுகள்" என்பவை வெறும் பிரசாரமாக இருந்தாலும், தமிழ்நாடு நடைமுறையில் இதை செயல்படுத்துகிறது.

'Guidance Tamil Nadu' நிறுவனங்களுக்கு நிலம், அனுமதிகள், தொழிலாளர் பிரச்சினைகள் மற்றும் அன்றாட செயல்பாட்டு சிக்கல்களுக்கு உதவுகிறது. இந்த விரைவான மற்றும் திறமையான அணுகுமுறை, முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையைத் தருகிறது.

செயல்திறன் மிக்க அரசு நிர்வாகம் மற்றும் அரசு அதிகாரிகள்: தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசும் அரசுப் பணியாளர்களும் தடையாக இல்லாமல், விரைவான தீர்வுகளை வழங்குகின்றனர். மத்திய அரசு மின்னணு சாதனங்களின் உதிரிபாகங்களுக்கான ஊக்கத்தொகைத் திட்டத்தை அறிவித்தபோது, தமிழ்நாடு ஒரு வாரத்திற்குள் தனது திட்டத்தை அறிவித்து, மின்னணு சாதனங்களின் ஏற்றுமதியை தற்போது உள்ள $14 பில்லியனிலிருந்து $100 பில்லியனாக உயர்த்தும் இலக்கை நிர்ணயித்தது.

மேலும், அரசியல் மற்றும் நிர்வாகத் தலைமை தொழிலாளர் பிரச்சினைகளுக்கு சமரச தீர்வுகளை வழங்குகிறது. எடுத்துக்காட்டாக, சாம்சங் தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் ஏற்பட்டபோது, அரசு தலையிட்டு விரைவாகத் தீர்வு கண்டது அரசின் செயலூக்கமுள்ள நடைமுறையை காட்டுகிறது. தமிழ்நாடு 2030க்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைய திட்டமிட்டுள்ளது. தமிழ்நாடே இந்தியாவில் உற்பத்திதுறையில் இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு வழிக்காட்டும் மாநிலமாக இருக்கிறது.

ஆந்திரா, தெலுங்கானா, உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள் தங்களுக்கிடையேயான போட்டியில், தமிழ்நாட்டின் வெற்றிப் பாடங்களைப் பின்பற்றினால், இந்தியா விரைவில் உற்பத்தித் துறையில் உலகளாவிய சக்தியாக உருவெடுக்கும்" இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# "பாமக யாருடைய தனிச் சொத்தும் கிடையாது" அன்புமணி ராமதாஸ் பேச்சு



சென்னை: மே.31-

"தமிழ்நாட்டின் வளர்ச்சிதான் நமது இலக்கு. எனவே நமக்குள் வேற்றுமைகள் எதுவும் இருக்கக்கூடாது. அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்படவேண்டும்" என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

சென்னை சோழிங்கநல்லூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அன்புமணி ராமதாஸ் இன்று பாமக நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார். இந்தக் கூட்டத்தில் பேசிய அன்புமணி ராமதாஸ், "அனைத்து சொந்தங்களுக்கும் வணக்கம். பாமகவின் புதிய உறுப்பினர் சேர்க்கை மற்றும் உறுப்பினர் புதுப்பித்தல் சம்மந்தமாக 5 மாவட்டத்தின் செயலாளர்கள், தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் இங்கே கூடியுள்ளோம். இது 3 ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் நிகழ்வு. நீங்கள் எல்லோரும் வேகமாக வேலை செய்து இப்பணியை முடிக்க வேண்டும்.

பாமக பொதுக்குழுவால் தேர்வு செய்யப்பட்டு தேர்தல் ஆணையத்தால் தலைவராக அங்கீகாரம் பெற்றது நான்தான். எப்போதும் நான் என்று சொல்லாமல் நாம் என்றே சொல்வேன். பாமக என்பது நானோ அல்லது வேறு யாருமோ கிடையாது, நீங்கள்தான் பாமக. நீங்கள் இல்லாமல் ஒன்றும் இல்லை. பாமக யாருடைய தனிச்சொத்தும் கிடையாது.

பொதுக்குழுவில் நீங்கள்தான் என்னை தலைவராக தேர்வு செய்தீர்கள். எனவே உங்களோடு சேர்ந்து ஒரு அடிமட்ட தொண்டனாக பணியாற்றுவதை அடிப்படை கடமையாக கொண்டு செயல்படுவேன். பொறுப்புகள் வரும் போகும். உங்கள் அன்பு பாசம் எப்போதும் போகாது. இப்போது 5 மாவட்டம், மாலையில் 5 மாவட்டம், நாளை காலை மற்றும் மாலையில் தலா 5 மாவட்டங்கள் என தொடர்ந்து மாவட்ட, மாநில நிர்வாகிகளை சந்தித்து கட்சியை வலுப்படுத்த வேண்டும்.

நமது சமூகநீதிக் காவலர் ராமதாஸ் நமது கட்சியை தொடங்கினார். சமூக நீதி, சமத்துவம், சனநாயகம் என்பதே அவரின் கொள்கை. அந்த கொள்கைகளை செயல்படுத்தும் தொண்டனாக உங்களோடு களத்தில் இறங்குவேன். நம் கட்சியை போன்று சிறப்பான கொள்கைகளை கொண்ட கட்சி தமிழ்நாட்டில் வேறு எந்த கட்சியும் கிடையாது. தமிழ்நாட்டின் வளர்ச்சிதான் நமது இலக்கு. எனவே நமக்குள் வேற்றுமைகள் எதுவும் இருக்கக்கூடாது. அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்படவேண்டும்" என்று கூறினார்.

பாமக பொருளாளராக திலகபாமா தொடர்வார் என அக்கட்சியின் தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அறிவித்துள்ளார். "பாட்டாளி மக்கள் கட்சியின் பொருளாளராக பொதுக்குழுவால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட திலகபாமா அவர்கள் அப்பொறுப்பில் தொடர்வார் என்று அறிவிக்கப்படுகிறது. பாட்டாளி மக்கள் கட்சியின் அனைத்து நிலை நிர்வாகிகளும் அவருக்கு தொடர்ந்து முழு ஒத்துழைப்பு அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்" என அன்புமணி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, திலகபாமாவை பொருளாளர் பதவியிலிருந்து நீக்கி அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் அறிவிப்பு வெளியிட்டார். புதிய பொருளாளராக சையது மன்சூர் என்பவரை நியமித்தும் அவர் அறிவித்தார்.

பாமகவில் கட்சி நிறுவனர் ராமதாஸ் தலைவர் அன்புமணி இடையே கடந்த ஓராண்டாகவே மோதல் போக்கு இருந்து வருகிறது. புதுச்சேரி அடுத்த பட்டானூரில் கடந்த டிசம்பர் மாதம் நடந்த பாமக புத்தாண்டு சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில், பாமக இளைஞர் சங்க தலைவராக, தனது மகள்வழி பேரன் முகுந்தனை ராமதாஸ் நியமித்தார். கூட்ட மேடையிலேயே இதற்கு அன்புமணி எதிர்ப்பு தெரிவித்தார்.

இதை தொடர்ந்து, சமீபத்தில் கட்சி தலைவர் பொறுப்பில் இருந்து அன்புமணியை நீக்கி, செயல் தலைவராக நியமிப்பதாக ராமதாஸ் அறிவித்தார். இந்த நிலையில், கடந்த வாரங்களில் தைலாபுரத்தில் ராமதாஸ் கூட்டிய நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் அன்புமணி மற்றும் அவரது ஆதரவாளர்கள் பங்கேற்கவில்லை.

இதன் தொடர்ச்சியாக, முன்னதாக, "அன்புமணிக்கு பக்குவம், தலைமை பண்பு இல்லை. 35 வயதில் அவரை மத்திய அமைச்சராக்கியது நான் செய்த தவறு. கட்சி பிரச்சினை பற்றி பேசிய தாய் மீது பாட்டிலை வீசி எறிந்தார். வளர்த்த கடா என் மார்பில் பாய்ந்துவிட்டது" என்று பாமக நிறுவனர் ராமதாஸ் அடுக்கடுக்காக பல குற்றச்சாட்டுகளை நேற்று முன்வைத்தது குறிப்பிடத்தக்கது.




■ புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.கோ.ராஜராஜன் அவர்கள், இணை இயக்குநர் (வேளாண்மை) திருமதி.மு.சங்கரலட்சுமி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி.ம.தீபாசங்கரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.உமா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.த.நந்தக்குமார், துணை இயக்குநர் (வேளாண்மை) (மத்திய அரசு திட்டம்) திருமதி.செல்வி, வேளாண்மை அலுவலர் திரு.முகமது ரபி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



## சட்ட உரிமை பாதுகாப்பு மக்கள் நலச் சங்கத்தின் சார்பில் நல திட்ட உதவிகள்

வேலூர் மே.31-

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் தாலுகா, லத்தேரி அடுத்த கலைஞர் நகர் பகுதியில் வசித்து வந்த கனரக மோட்டார் வாகன ஓட்டுநர் யுவராஜ் அவர்கள் நெஞ்சு வலி காரணமாக வாகனம் ஓட்டும்போது இறந்து விட்டார். அவருடைய உடலை சட்ட உரிமை பாதுகாப்பு மக்கள் நல சங்கத்தின் மாவட்ட செயலாளர் சரவணன் தலைமையில் கே வி குப்பம் பனமடங்கி பகுதியை சேர்ந்த மாவட்டத் துணைச் செயலாளர் குபேந்திரன் உதவியுடன் ஓட்டுநரின் உடலை லத்தேரி பகுதியில் உள்ள கலைஞர் நகர் வசிக்கும் அவரது இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டது. ஓட்டுநரின் மனைவி மற்றும் மூன்று பிள்ளைகள் மிகவும் மன வேதனை இருந்த போது, சட்ட உரிமை பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் பத்தாயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கி அவருடைய ஈமச் சடங்குகள் செய்யப்பட்டது. அது மட்டும் இல்லாமல் மாநில அளவில் நடைபெற்ற சட்ட உரிமை பாதுகாப்பு சங்கத்தின் ஆலோசனைக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் கண்ணன் தலைமை தாங்கி மாநில துணைச் செயலாளர் சரவணன் பங்கேற்று பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டது. அப்பொழுது வேலூர் மாவட்டத்திற்கு என தையில் இயந்திரம் வழங்கினர். மாவட்டத்திற்கு என்ற ஒதுக்கிய தையில் இயந்திரம் இன்று மாநில நிர்வாக செயலாளர் பாக்யராஜ் தலைமையில் மாவட்ட செயலாளர் சரவணன் மாவட்ட துணைச் செயலாளர் வி.குபேந்திரன், குடியாத்தம் ஒன்றிய செயலாளர் கோபி மற்றும் குடியாத்தம் நகர செயலாளர் ஆனந்தன் மற்றும் குடியாத்தம் நகர இளைஞரணி செயலாளர் கருணாநிதி, குடியாத்தம் நகர மகளிர் அணி செயலாளர் கவிதா சரவணன், குடியாத்தம் ஒன்றிய இணைச் செயலாளர் தன்ராசு மற்றும் லத்தேரி காவல் நிலைய காவலர் சீனிவாசன் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. சட்ட உரிமை பாதுகாப்பு மக்கள் நலசங்கத்தின் நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் என பலர் உடனிருந்தனர்.

### முள்ளுக் கத்திரிக்காய்க்கு புகழ்பெற்ற இலவம்பாடியில் ஆவின் ஒருங்கிணைந்த

## வேலூரில் வம்சாவளி திட்ட பசுக்கள் அதிக பால் கறவை மாடுகளுக்கு பலூன் மற்றும் பேட்ச் அணிந்து கௌரவித்து விவசாயிகளுக்கு பரிசு வழங்கி பாராட்டு







வேலூர் மே.31-

வேலூர் மாவட்டம், ஆவின் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில்,வேலூரில் வம்சாவளி திட்ட பசுக்கள் அதிக பால் கறவை மாடுகளுக்கு பலூன் மற்றும் பேட்ச் அணிந்து கௌரவித்து விவசாயிகளை பாராட்டி பரிசுகளை வழங்கினர். இந்த திட்டத்தில் சுமார் 15 ஆண்டுகளாக இந்த சிறப்பு நிகழ்ச்சியை நடத்தி விவசாயிகளை கௌரவித்து பாராட்டி பரிசு வழங்கி வருகின்றனர். வேலூரில் அணைக்கட்டு தாலுகா இலவம்பாடி கூட்டுறவு பால் உற்பத்தி நிலையத்தில் இவ்விழா ஒருங்கிணைந்த மாவட்ட ஆவினின் பொது மேலாளர் இளங்கோவன் ஆணைக்கிணங்க நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக துணை பதிவாளர் பால்வளம் கோபி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி கறவை மாடு மற்றும் விவசாயிகளை கௌரவித்து பாராட்டி பரிசுகளை வழங்கினார்.

இந்த திட்டத்தில் முதல் பரிசாக மனோகரன் கோவிந்தசாமி என்பவரின் பசு 9.4 லிட்டர், இரண்டாவது பரிசாக, மூன்றாவது பரிசாக ஏ.கே.மணி மனோன்மணி என்பவரின் பசு 3.5லிட்டர் பால் உற்பத்தியை அதிகரித்து வழங்கினர். மேலும், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 30 வம்சாவளி திட்ட பசுக்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. இதில் உதவி பொது மேலாளர் லிடியா, திட்ட ஒருங்கிணைப்பாளர் சுரேஷ், மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் விஜய பிரபாகரன், மேலாளர் நரசிம்மன் மற்றும் அலுவலர்கள் நாராயணன், மேற்பார்வையாளர்கள், கூட்டுறவு சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## குளச்சல் அருகே கடலில் கரை ஒதுங்கிய கன்டெய்னர் எண்ணெய் படலம் பரவுகிறதா என கண்காணிப்பு






குளச்சல், மே.31-

குளச்சல் அருகே வாணியக்குடியில் கன்டெ ய்னர் கரை ஒதுங்கியது. அதிலிருந்து எண்ணெய் படலம் பரவுகிறதா என கண்காணி க்கப்பட்டு வருகிறது.

கேரளா மாநிலம் கொச்சி கடல் பகுதியில் லைபீரியா நாட்டு சரக்கு கப்பல் சமீபத்தில் மூழ்கியது. அதில் இருந்த 640 கன்டெய்னர்கள் கடலிலே மூழ்கின. அவை கேரளா கடலோரப் பகுதி உட்பட ஆங்காங்கே கடற்கரை களில் கரை ஒதுங்கி வருகின்றன. தற்போது கன்டெய்னர்களில் ஒன்று கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் அருகே வாணியகுடி கடற்கரையில் கரை ஒதுங்கி இருக்கிறது. இது மீனவர் மத்தியில் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்திருக்கிறது.

சில கன்டெய்னர்கள் சேதமடைந்த நிலையிலே அதில் இருந்து பல ரசாயன மற்றும் எண்ணெய் பொருட்களும் கடலில் சிதறியுள்ளன. அவையும் கன்னியாகுமரி மாவட்டத்தில அனைத்து கடற்கரை களிலும் கரை ஒதுங்கி கொண்டிருக்கின்றன. இதனால் மீனவர்கள் பாதிப்புக்குள்ளான கடல் பகுதிகளில் மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது கொச்சியில் கடலில் மூழ்கிய கன்டெய்ன ர்கள் பல குமரி மாவட்ட கடல் பகுதியில் நகர்ந்து வந்திருக்கலாம் என்ற அச்சம் நிலவி வருகிறது. இந்த கன்டெய்னர்கள் கடலுக்குள் இருப்பதால் மீனவர்கள் மீன்பிடிக்கின்ற பொழுது அவர்களது மீன்பிடி வலைகள், தூண்டில்கள் படகுகள் பாதிக்கப்படவும் வாய்ப்புள்ளது. மேலும், இரவு நேரத்திலே கடலிலே மிதந்து வரக்கூடிய இந்த கன்டெய்னர்களிலே மீனவர்கள் படகு மோதி சேதம் அடையவும், மூழ்கவும் வாய்ப்புகள் உள்ளது.

எனவே, கடலிலே மூழ்கியுள்ள அனைத்து கன்டெய்னர்களையும் கண்டுபிடித்து அப்புறப்படுத்த வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கரை ஒதுங்கிய கன்டெய்னரில் இருந்து வெளியான ரசாயன பொருட்களை தூய்மைப் பணியாளர்கள் அகற்றி வருகின்றனர். மேலும், குமரி கடல் பகுதிகளில் எண்ணெய் படலம் பரவுகிறதா எனவும் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

## “சாதிவாரி கணக்கெடுப்பை ஆதரிக்க திமுக ஏன் நீண்ட காலமாக தயங்கியது?” எடப்பாடி பழனிசாமி கேள்வி

சென்னை: மே.31-

“திமுக திடீரென சாதி ரீதியான கணக்கெடுப்பை ஆதரிப்பது அதன் கொள்கை சார்ந்த முடிவாகத் தோன்றவில்லை. அரசியல் நெருக்கடி காரணமாக சாதி ரீதியான கணக்கெடுப்பை திமுக ஆதரிப்பதாகத் தோன்றுகிறது. அவர்கள் இந்த விஷயத்தில் தாமதமாகவும், திசை மாறிய நிலையிலும் உள்ளனர். அதிமுகவோ இதற்கு முரண்பாடாக நேர் எதிராக, தெளிவாகவும், உறுதியாகவும் உள்ளது” என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: மத்திய அரசு அண்மையில், விரிவான விதத்தில் சாதி ரீதியான கணக்கெடுப்பை நடத்தப்போவதாக அறிவித்துள்ளது. இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல் போன்ற தருணம். இந்தியாவின் சமூகநீதிக் கொள்கையின் வரையறைகளை சீரமைத்து மாற்றியமைப்பதற்கான வாக்குறுதி இது. தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித்தலைவர் என்ற முறையில் இதை நம்பிக்கையுடனும், பெருமையுடனும் நான் வரவேற்கிறேன்.

சாதி ரீதியான கணக்கெடுப்பு என்பது அதிமுக ஏற்கெனவே தெளிவுடனும், முன்னோக்கிய பார்வையுடனும் முன்வைத்த ஒரு வேண்டுகோள். இந்த தருணம், ஒரே இரவில் உருவான தருணமல்ல. சாதி ரீதியான கணக்கெடுப்புக்கான இந்த அழைப்பு இப்போது தேசிய அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. ஆனால் இதன் வேர்கள், தமிழகத்தின் சமூகநீதி இயக்கத்தில் இருந்து, அதன் கொள்கை நிலத்தில் இருந்து வந்தது.

இந்த சமூகநீதி பயணம் என்பது எங்களது முன்னோக்கிய தொலைநோக்குப் பார்வை கொண்ட மறைந்த முதல்வர் ஜெயலலிதா போட்ட அஸ்திவாரம். நேர்மையான, சமமான பிரதிநிதித்துவத்துக்கு அடிக்கல் நாட்டியவர் அவர்தான். 2021ம் ஆண்டின் தொடக்கத்தில் நான் முதல்வராக இருந்த நேரத்தில், சாதி ரீதியான கணக்கெடுப்பை நடத்த சொன்ன முதல் அரசுகளில் எங்களது அரசும் ஒன்று. 1931 ம் ஆண்டு காலத்தில் இருந்து தொடர்ந்து வரும் காலாவதியான பழைய தரவுகள், தகவல்களை வைத்துக்கொண்டு நலத்திட்டங்கள் எதையும் நிறைவேற்ற முடியாது என்று ஆரம்பம் முதலே நாங்கள் வாதாடி வருகிறோம்.

முன்னேற்றம் என்பது அனுதாபம் மூலம் வர முடியாது. ஆதாரங்கள் மூலம் மட்டுமே முன்னேற்றம் வரும். 69 சதவிகித இடஒதுக்கீடு கொள்கை மூலம் நீண்டகாலமாக கலங்கரை விளக்கம் போல உறுதியான செயல்பாட்டுடன் விளங்கிய கட்சி அதிமுக. அதிமுகவின் சாதனைகள் ஒரு விபத்து போல திடீரென ஏற்படுத்தப்பட்ட சாதனைகள் அல்ல. கட்சியின் அரசியல் உறுதிப்பாடு காரணமாகவும், சட்டரீதியான நிபுணத்துவத்தின் மூலமாகவும் அதிமுகவின் இந்த சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

உச்சநீதிமன்றத்தில் இந்திரா சாஹனி (மண்டல்) வழக்கில் 1992 ம் ஆண்டு தீர்ப்பு வெளியானது. இடஒதுக்கீடுகளுக்கு இந்த தீர்ப்பு 50 சதவிகித வரம்பு விதித்தது. தமிழகத்தின் அடிப்படையான கொள்கை கட்டமைப்புக்கு இது அச்சுறுத்தலாக அமைந்தது. ஆனால் அந்த சவாலை மறைந்த முதல்வர் ஜெயலலிதா உறுதியுடன் எதிர்கொண்டார். 1993ம் ஆண்டு சிறப்பு சட்டப்பேரவைக் கூட்டத்தைக் கூட்டி ஒருமனதாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்.

டெல்லிக்கு அனைத்துக் கட்சி தூதுக்குழு ஒன்றை அனுப்பி வைத்தார். அவரது இடைவிடாத, விடாப்பிடியான, தொடர்ச்சியான வற்புறுத்தல் காரணமாக தமிழ்நாட்டின் இடஒதுக்கீட்டு சட்டம், அரசியல் அமைப்பின் 9வது அட்டவணையில் இடம்பெற்றது. நீதித்துறை வந்து மீளாய்வு செய்வதில் இருந்து சமூக நீதியை அது பாதுகாத்தது. மறைந்த முதல்வர் ஜெயலலிதா அன்று செய்தது வெறும் அரசாட்சி அல்ல.



அதன் பெயர் தலைமைத்துவம். சாதி ரீதியான கணக்கெடுப்பு குறித்து 2021ம் ஆண்டு நாங்கள் வைத்த சாதி ரீதியான கணக்கெடுப்பு வேண்டுகோள், வெறும் அரசியல் அலங்காரத்துக்காக முன் வைத்த வேண்டுகோள் அல்ல.

தமிழகத்தின் சமுதாய யதார்த்தங்களை புரிந்து வைத்திருந்த எங்களது நீண்டகால புரிதலின் பிரதிபலிப்பு இது. பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, பட்டியலின, பழங்குடி மக்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு, நலத்திட்டங்களில் உண்மையான சரியான பிரதிநிதித்துவம் வேண்டும். இதை மறுமதிப்பீடு செய்ய வேண்டிய அவசரத் தேவை இருப்பதை நாங்கள் உணர்கிறோம். ஏற்றுக்கொள்கிறோம். சாதி ரீதியான கணக்கெடுப்பு குறித்து ஆரம்பகட்டத்தில் நாங்கள் பேசிய காலத்தில், ஆளும் திமுக அமைதியாக, மவுனமாக இருந்தது. ஆனால் இப்போது அதே கட்சி, சாதி வாரி கணக்கெடுப்பில் தங்களை ஏதோ முன்னணி வழிகாட்டிகள், ஒளிகாட்டிகள் போல பேசிக் கொள்கிறார்கள்.

2023 ம் ஆண்டின் பிற்பகுதியில்தான் திமுக முதல்வர் இதுபற்றி பிரதமருக்குக் கடிதம் எழுதினார். நாங்கள் ஏற்கெனவே பேசி வந்த விஷயத்தைத்தான் அவர் எதிரொலித்தார். சாதி ரீதியான கணக்கெடுப்பை நடத்துவோம் என்ற மத்திய அரசின் அறிவிப்புக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். கடைசியாக இது தேசிய நிகழ்ச்சி நிரலில் சேர்ந்திருக்கிறது. திமுகவின் இரட்டை வேடத்தையும், போலி நிலைப்பாட்டையும் இது வெளிப்படுத்தியிருக்கிறது.

இப்போதும் கூட திமுகவின் நடவடிக்கைகள் முன்னோடி நடவடிக்கையாக, வழிகாட்டும் நடவடிக்கைகள் போலத் தெரியவில்லை. சந்தர்ப்பவாத அரசியல் நடவடிக்கைகளாகவே தெரிகிறது. அவர்கள் சாதிக் கணக்கெடுப்பு பற்றி அமைத்த ஒருநபர் ஆணையத்தை பற்றி புகழ்ந்து தள்ளுகிறார்கள். நிறைய பேசுகிறார்கள். அதில் தெளிவும் இல்லை. போக வேண்டிய திசையும் இல்லை. சாதி ரீதியான கணக்கெடுப்பு விஷயத்தில் எப்போதும் உறுதியாக நின்ற கட்சி அதிமுக.

தொடர்ச்சியான உறுதியான நடவடிக்கை மூலம் செயல்பட்ட கட்சி. திமுக அடையாள ரீதியாக சைகைகளை மட்டுமே காட்டும் கட்சி. எங்களது சாதனைகள் பற்றி நாங்கள் பேச வேண்டியதில்லை. எங்கள் சாதனைகளே பேசும். இடஒதுக்கீடு தொடர்பான வரலாற்றுப் பாதையில் இருந்து அதிமுக மரபு, கொள்கைகளை பிரிக்க முடியாது. 1980களில் அதிமுகவின் நிறுவனர் எம்ஜிஆர், பிற்படுத்தப்பட்டோருக்கான 50 சதவிகித இடஒதுக்கீட்டை வலியுறுத்தினார். ஒட்டுமொத்த ஒதுக்கீட்டை 68 சதவிகிதமாக உயர்த்தினார்.

1990ம் ஆண்டு, இந்த ஒதுக்கீடு 69 சதவிகிதமாக மாறியது. நீதிமன்றங்கள் இதுகுறித்து சந்தேகம் எழுப்பியபோது, ஜெயலலிதா அரசியலமைப்பு வழிமுறைகள் மூலமாக இடஒதுக்கீட்டைப் பாதுகாத்தார். இந்திய அளவில் இடஒதுக்கீடு கொள்கையில் உறுதிபட நிலைத்திருக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். அரசியலமைப்பு மூலம் இடஒதுக்கீட்டை பாதுகாத்தவர்கள் நாங்கள். எதிர்ப்புகளைக் கண்டு எப்போதும் நாங்கள் பின்வாங்கியதோ சலனப்பட்டதோ இல்லை. சாதி வாரி கணக்கெடுப்பை நடத்தப்போகிறோம் என்ற மத்திய அரசின் அறிவிப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கது. துணிவு மிக்கது.

இதை வரவேற்கிறோம். வெறும் தரவுகளை மட்டும் வைத்துக் கொண்டு சமகால தேவைகளை பூர்த்திசெய்யும் நலத்திட்ட கொள்கைகளை வகுக்க முடியாது என்று நாங்கள் நம்புகிறோம். சரியான பிரதிநிதித்துவத்துடன், வளங்கள் சரியாகப் பகிரப்படுவதன் மூலமாகவே நலத்திட்ட கொள்கைகளை வகுக்க முடியும். சாதி ரீதியாக கணக்கெடுப்பு இப்போது தேசிய அளவில் கவனம் பெற்றிருப்பது மகிழ்ச்சி தருகிறது. இதன் முக்கியத்துவதைப் புரிந்து கொண்டு இதை ஏற்று அங்கீகரிக்க வேண்டும் என மத்தியில் உள்ள எங்கள் கூட்டணி கட்சியினரை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த கணக்கெடுப்பு மூலம் சாதிய அடிப்படையில் மக்களின் பரவல், அவர்களது கல்விநிலை, வேலை வாய்ப்பு நிலை, சமூக பொருளாதார நிலை போன்றவற்றை நாடு தழுவிய விதத்தில் தெரிந்து கொள்ள முடியும். இதன்மூலம் இடஒதுக்கீட்டை புதிதாக சிறப்பாக கட்டமைக்க முடியும். சமூகத் திட்டங்கள் எவ்வாறு இலக்கு வைக்கப்படுகின்றன, மத்திய மாநில அரசுகள் இணைந்து உள்ளடக்கிய வளர்ச்சியை நீண்டகாலமாக அவை எவ்வாறு அணுகுகின்றன என்பதை இந்த கணக்கெடுப்பு மறு வடிவமைக்கக் கூடும்.

சாதி வாரி கணக்கெடுப்பை ஆதரிக்க திமுக ஏன் நீண்ட காலமாகத் தயங்கியது? ஒருவர் இந்த கேள்வியைக் கேட்கலாம். தேர்தல் கணக்குகளில் இதற்கான பதில் ஒளிந்திருக்கிறது. ஒளிவுமறைவற்ற தெள்ளத்தெளிவான ஒரு சாதிய கணக்கெடுப்பு சாதி ரீதியான கூட்டணிகளைப் பாதிக்கலாம். அதற்கு தொல்லை தரலாம். சாதி ரீதியான கூட்டணிகளை திமுக நீண்டகாலமாக கவனமாகக் கட்டமைத்து வருகிறது. இதற்கு நேர் எதிராக அதிமுக வசதியான கற்பனைகள், கற்பிதங்களை விட சங்கடம் தருகிற உண்மைகளை நம்புவதே நல்லது என்ற கருதுகிறது.

எங்களைப் பொறுத்தவரை நீதி என்பது எப்போதும் உறுதியாக நிலைநாட்டப்படுவதாக இருக்க வேண்டும். அதற்காகத்தான் நாங்கள் சலனப்படாமல் நிற்கிறோம். திமுக திடீரென சாதி ரீதியான கணக்கெடுப்பை ஆதரிப்பது அதன் கொள்கை சார்ந்த முடிவாகத் தோன்றவில்லை. அரசியல் நெருக்கடி காரணமாக சாதி ரீதியான கணக்கெடுப்பை திமுக ஆதரிப்பதாகத் தோன்றுகிறது. அவர்கள் இந்த விஷயத்தில் தாமதமாகவும், திசை மாறிய நிலையிலும் உள்ளனர். அதிமுகவோ இதற்கு முரண்பாடாக நேர் எதிராக, தெளிவாகவும், உறுதியாகவும் உள்ளது.

சாதி ரீதியான கணக்கெடுப்பு என்பது நோய் தீர்க்கும் மருந்தல்ல. அது ஒரு முக்கியமான, தேவைப்படும் கருவி. இந்தியாவை அனைத்து மக்களின் சரியான பிரதிநிதித்துவத்துடன் நாம் கட்டியமைக்க வேண்டும் என்றால் மக்கள் யார் யார், அவர்கள் எங்கே நிற்கிறார்கள் என்பதையெல்லாம் நாம் புரிந்துகொள்ள ஆரம்பிக்க வேண்டும். எவ்வளவு தொலைவுக்கு அவர்கள் இன்னும் போக வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் தமிழ்நாடு மீண்டும் ஒருமுறை வழிகாட்டி மாநிலமாகத் திகழ்கிறது. எடுத்துக்காட்டுகள் மூலம் அது மீண்டும் ஒருமுறை வழிகாட்ட வேண்டும்” என்று அவர் கூறியுள்ளார்.







■ ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்திற்கு தமிழக ஆளுநர் தனது குடும்பத்தினருடன் சாமி தரிசனம் செய்வதற்காக நேற்று ( மே30) சிவகங்கை மாவட்டம் மணலூர் திருப்புவனம், லாடனேந்தல் ரயில்வே மேம்பாலத்தில் இருப்புப்பாதை சிறப்பு சார்பு ஆய்வாளர் அய்யாதுரை ,காவலர் முருகன், காவலர்கள் சரவணகுமார், பிரியா, கொம்பையன், பரணி செல்வம் ஆகியோர் பாதுகாப்புபணியில் ஈடுபட்டு வந்தனர் அங்கு இருப்பு பாதை சார்பு ஆய்வாளர் தனுஷ்கோடி ஆய்வு மேற்கொண்டார்

# சிவகங்கை காளையார்கோவில் வட்டாரத்திற்குட்பட்ட பகுதியில் நடைபெற்ற ” உழவரைத்தேடி வேளாண்மை உழவர் நலத்துறை” திட்ட முகாமில்,மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித்பங்கேற்று, முகாமினை தொடங்கி வைத்தார்

சிவகங்கை, மே.31-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், காணொலி காட்சி (Offline) வாயிலாக இன்றையதினம் (29.05.2025) வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் ”உழவரைத்தேடி வேளாண்மை உழவர் நலத்துறை” திட்டம் தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து, சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டாரத்திற்குட்பட்ட குருந்தனிவாரியேந்தல் கிராமத்தில் நடைபெற்ற ”உழவரைத்தேடி வேளாண்மை உழவர் நலத்துறை” திட்ட முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் பங்கேற்று, முகாமினை தொடங்கி வைத்து தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் வேளாண்மைத்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி விவசாயிகளின் உற்ற தோழனாக திகழ்ந்து வருகிறார்கள்.

அதன் ஒரு பகுதியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேளாண்மைத்துறையின் சார்பில் ”உழவரைத்தேடி வேளாண்மை உழவர் நலத்துறை” என்ற புதிய திட்டத்தினை இன்றையதினம் காணொலி காட்சி (Offline) வாயிலாக தொடங்கி வைத்துள்ளார்கள்.

வேளாண்மை உழவர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம், விதைச்சான்றளிப்புத் துறை வட்டார அலுவலர்கள் மற்றும் சார்புத்துறைகளான கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, கூட்டுறவுத்துறை, பட்டு வளர்ச்சித்துறை, வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ஆகியோர்களால், உழவர்களை அவர்களது வருவாய் கிராமங்களிலேயே நேரடியாக சந்தித்து அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதோடு, வேளாண்மையினை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் பயிர் சார்ந்த தொழில்நுட்பங்களையும், வேளாண்மை உழவர் நலத்துறை மற்றும் சார்புத்துறைகளின் திட்டங்களையும் எடுத்துக் கூறி



விவசாயிகளை பயன்பெற செய்வதே ”உழவரைத்தேடி வேளாண்மை உழவர் நலத்துறை” திட்டத்தின் நோக்கமாகும்.

அதற்கென, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு வட்டாரத்திலும் இரு கிராமங்களை தேர்ந்தெடுத்து, திட்ட முகாம்கள் நடத்தப்படவுள்ளது. அதில், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 12 வட்டாரங்களிலும் தலா 2 கிராமங்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு, 24 கிராமங்களில் இத்திட்ட முகாமானது இன்றையதினம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இன்றையதினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள இம்முகாமில், அந்தந்த சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பித்துள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதில், விவசாயிகள் தங்களது கோரிக்கைகள் மற்றும் தேவைகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் எடுத்துரைப்பர். ஆனால், இத்திட்டமானது துறை சார்ந்த அலுவலர்களே விவசாயிகளின் இருப்பிடத்திற்கு சென்று, அவர்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளை கேட்டறியும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், வேளாண்மைத் துறையானது தோட்டக்கலை, வேளாண் வணிகம், கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, கூட்டுறவுத்துறை, பட்டு வளர்ச்சித்துறை போன்ற பல்வேறு துறைகளை உள்ளடக்கியதாகவே உள்ளது. தேனீ வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு போன்றவைகளும் வேளாண்மையை சார்ந்தே உள்ளது. அதில், கூட்டுறவுத்துறையின் சார்பில் இயங்கி வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் தான் விவசாயிகள் பயிர் கடனுதவிகள் பெற்று பயனடைந்து வருகின்றனர். இவ்வாறாக, ஒரு விவசாயின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கென அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு இத்திட்டம் அடிப்படையாக அமைகிறது.

அதனடிப்படையில், ”உழவரைத்தேடி வேளாண்மை உழவர் நலத்துறை” திட்ட முகாமானது, ஒவ்வொரும் மாதமும் இரண்டாவது மற்றும் நான்காவது வெள்ளிக்கிழமைகளில் அனைத்து வட்டாரங்களிலும் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், இம்முகாமில் வேளாண்மையை சார்ந்த 09 துறை அலுவலர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இதுபோன்று, நடைபெறும் முகாம்கள் குறித்து, விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் துறை ரீதியாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, விவசாயிகள் வேளாண்மைத்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் சொட்டி நீர் பாசனம் திட்டம், சூரிய ஒளித்திட்டம், கூட்டுறவுத்துறையின் சார்பில் வழங்கப்படும் பல்வேறு வகையான பயிர்கடனுதவிகள், வேளாண் பொறியியல் துறையின் சார்பில் வழங்கப்படும் பவர் வீடர், டிரில்லர், ஸ்பேரேயர் ஆகியவைகள் குறித்தும் அறிந்திடல் வேண்டும்.

எனவே, விவசாயிகள் தங்களது பகுதியில் நடைபெறும் திட்ட முகாம்களின் வாயிலாக தங்களது தேவைகள் மற்றும் கோரிக்கைகளை துறை சார்ந்த அலுவலர்களிடம் எடுத்துரைத்து, தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு விவசாய நல திட்டங்களின் வாயிலாக பயன்பெற வேண்டும். மேலும், விவசாயிகள் தாங்கள் பயன்பெறுவது மட்டுமன்றி, தாங்களை சார்ந்தோர்களுக்கும் இத்திட்டம் குறித்து எடுத்துரைத்து பயன்பெற செய்திடல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித்,தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 01 விவசாயிக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டு திட்டம் 20252026ன் கீழ் ரூ.200/ மதிப்பீட்டிலான பழக்கன்றுகள் தொகுப்பினையும், 02 விவசாயிகளுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கம் 20252026ன் கீழ் ரூ.68,596/ மதிப்பீட்டிலான கொய்யா மற்றும் மா பரப்பு விரிவாக்க தொகுப்புகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 03 விவசாயிகளுக்கு விதை கிராம திட்டத்தின் கீழ் ரூ. 735/ மதிப்பீட்டிலான வேளாண் இடுபொருட்களையும் என ஆக மொத்தம் 06 விவசாயிகளுக்கு ரூ.69,531/ மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் வழங்கினார்.

மேலும், இம்முகாமினை முன்னிட்டு விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில், வேளாண்மைத்துறையின் சார்பில் அமைப்பட்டிருந்த கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர். விஜயகுமார், துணை இயக்குநர் (வேளாண் வணிக வேளாண்மை) செல்வி.ப.தமிழ்செல்வி, உதவி இயக்குநர் (மாநில திட்டம்) திரு.மதுரைசாமி, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திருமதி.தனலட்சுமி, காளையார்கோவில் வட்டாட்சியர் திரு.முபாரக் மற்றும் வேளாண்மை துறையை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சைபர் கிரைம் கும்பலுக்கு எதிராக 19 இடங்களில் சிபிஐ சோதனை: 6 முக்கிய நபர்கள் கைது

டெல்லி, மே.31-

ஜப்பானியர்களை குறிவைத்து மோசடியில் ஈடுபடும் சைபர் கிரைம் கும்பலுக்கு எதிராக 19 இடங்களில் சிபிஐ நேற்று சோதனை நடத்தியது. இதில் 6 முக்கிய நபர்களை கைது செய்துள்ளது.

வெளிநாட்டினருக்கு எதிராக குறிப்பாக ஜப்பான் நாட்டு மக்களை குறிவைத்து இந்தியாவில்




நடைபெறும் சைபர் கிரைம் மோசடி தொடர்பாக சிபிஐ ஏற்கெனவே வழக்குப் பதிவு செய்துள்ளது. பிரபல பன்னாட்டு நிறுவனங்களின் தொழில்நுட்ப உதவியாளர்கள் என்று கூறி இக்கும்பல் மோசடியில் ஈடுபட்டுள்ளது. இதற்காக சட்டப்பூர்வ வாடிக்கையாளர் சேவை மையங்களை போன்று கால் சென்டர்களை இயக்கி வந்துள்ளது.

இந்நிலையில் இக்கும்பலுக்கு எதிராக டெல்லி, ஹரியானா மற்றும் உத்தரபிரதேசத்தில் 19 இடங்களில் சிபிஐ அதிகாரிகள் நேற்று ஒருங்கிணைந்த சோதனை நடத்தினர். இச்சோதனையில் டெல்லியில் அஷு, பானிபட்டில் கபில் காக்கர், அயோத்தியில் ரோகித் மவுர்யா, வாராணசியில் சுபம் ஜெயஸ்வால், விவேக் ராஜ், ஆதர்ஷ் குமார் என 6 முக்கிய நபர்களை கைது செய்தனர். மேலும் 2 இடங்களில் மோசடி தொடர்பான கால் சென்டர்களை அகற்றினர்.



# மேற்கு வங்கம் முழுவதும் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது: பிரதமர் மோடி குற்றச்சாட்டு

டெல்லி, மே.31-

மேற்கு வங்கத்தில் ஊழல் அதிகரித்துள்ளது என பிரதமர் நரேந்திர மோடி நேற்று குற்றம்சாட்டினார்.

மேற்குவங்கத்தின் அலிப்பூர்துவாரில் நேற்று நடைபெற்ற அரசு நலத் திட்ட விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார். அப்போது அலிப்பூர்துவார் மற்றும் கூச்பெஹார் மாவட்டங்களில் ரூ.1,010 கோடி மதிப்பிலான எரிவாயு விநியோக திட்டத்துக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

விழாவில் அவர் பேசியதாவது: அண்மையில் மேற்குவங்கத்தின் முர்ஷிதாபாத், மால்டாவில் வன்முறை சம்பவங்கள் அரங்கேறின. அப்பகுதி பொது மக்கள் மீது கொடூர தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அவர்களின் சொத்துகள் சூறையாடப்பட்டன. அவர்களின் வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. திரிணமூல் காங்கிரஸ் கொடுங்கோல் ஆட்சியை நடத்தி வருகிறது. இந்த ஆட்சியில் அப்பாவி மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. அரசு பள்ளி ஆசிரியர் நியமனத்தில் மிகப்பெரிய மோசடி நடைபெற்று இருக்கிறது. இந்த விவகாரத்தில் ஏராளமான ஆசிரியர்கள் வேலையிழந்து உள்ளனர். மாநிலத்தின் கல்வித் துறை முழுமையாக சீர்குலைந்திருக்கிறது.

சட்டம், ஒழுங்கு சீர்குலைவு: மேற்குவங்கத்தில் பல்வேறு பிரச்சினைகள் பூதாகரமாகி வருகின்றன. குறிப்பாக மாநிலம் முழுவதும் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் கணிசமாக அதிகரித்து உள்ளன. வேலைவாய்ப்பின்மை பிரச்சினையால் இளைஞர்கள் பரிதவிக்கின்றனர். அரசு நிர்வாகம் சீர்குலைந்து அனைத்து துறைகளிலும் ஊழல் வியாபித்து பரவி உள்ளது. ஏழைகளின் உரிமைகள், சொத்துகள் பறிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஏப்ரல் 22ம் தேதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் சுற்றுலா பயணிகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். நமது சகோதரிகளின் குங்குமம் அழிக்கப்பட்டது. இதற்கு பதிலடியாக ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் மூலம் கடந்த 7ம் தேதி பாகிஸ்தானில் செயல்பட்ட 9 தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன. அதன்பிறகு நடைபெற்ற போரில் பாகிஸ்தானின் விமான படைத்தளங்கள் அழிக்கப்பட்டன.

குங்குமத்தின் வலிமை குறித்து நமது ராணுவம் வீரர்கள் பாகிஸ்தானுக்கு தகுந்த பாடம் கற்பித்து உள்ளனர். இந்தியாவில் மீண்டும் தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டால் அதற்கான விலையை பாகிஸ்தான் கொடுக்க நேரிடும். ஆபரேஷன் சிந்தூர் முடியவில்லை. இவ்வாறு அவர் பேசினார்.

சிக்கிம் 50 ஆண்டு நிறைவு: சிக்கிம் மாநிலம் உதயமாகி 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இதையொட்டி தலைநகர் காங்டாக்கில், ‘சிக்கிம் 50’ என்ற நிகழ்ச்சிநேற்று நடைபெற்றது. இதில் காணொலி வாயிலாக பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி, நாம்சி பகுதியில் ரூ.750 கோடியில் கட்டப்பட்ட அரசு மருத்துவமனையை திறந்து வைத்தார்.

விழாவில் அவர் பேசும்போது, “சிக்கிம் உட்பட வடகிழக்கு மாநிலங்கள் அனைத்தும் அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்றன. இயற்கை வேளாண்மையின் மையமாக சிக்கிம் உருவெடுத்துள்ளது. மாநிலத்தின் சுற்றுலா துறை அபார வளர்ச்சி அடைந்து வருகிறது. பல்வேறு விளையாட்டு வீரர்கள் வடகிழக்கை சேர்ந்தவர்கள் என்பது பெருமிதம் அளிக்கிறது'' என்றார். பிரதமர் நரேந்திர மோடி நேற்று மாலை பிஹார் தலைநகர் பாட்னாவுக்கு சென்றார். அங்கு பாட்னா விமான நிலையத்தின் புதிய முனையத்தை அவர் திறந்து வைத்தார்.

# இதய நோய்களுக்காக தட்டணு எதிர்மருந்துகளை உட்கொள்ளும் நோயாளிகளில் பெரிய சிறுநீரக கற்களை அகற்றும் சிகிச்சையளிப்பதில் திறன்மிக்க திகழும் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை!

மதுரை, மே.31

மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம், ரெட்ரோகிரேட் இண்ட்ராரினல் சர்ஜரி (RPS) எனப்படும் சிகிச்சை மூலம் வயதுப் பெண் நோயாளி ஒருவருக்கு சிறுநீரகத்தில் இருந்த இரண்டு பெரிய கற்கள் வெற்றிகரமாக அகற்றப்பட்டுள்ளன. அவர். இரத்தக் கட்டி ஏற்படுவதைத் தடுப்பதற்கான இரு வெவ்வேறு வகையான மருந்துகளை உட்கொண்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நோயாளிக்கு இதயநோயக்கான சிகிச்சையில் ஒரு மாதத்துக்கு முன்பு ஸ்டென்ட் பொருத்தப்பட்டிருந்தது அவரது வலது சிறுநீரகத்தில் 35 25 செ.மீ அளவுள்ள கல்லும், இடது சிறுநீரகத்தில் 215 செ.மீ கல்லும் இருந்தன. தற்போது அவையிரண்டுமே அகற்றப்பட்டு சிகிச்சைக்குப் பிறகு நோயாளி நலத்துடன் இருக்கிறார்.

இது குறித்து நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின யூராலஜி, ஆண்கள் நோயியல் பிரிவின் முதுநிலை மருத்துவ




நிபுணர் மற்றும் ரோபோட்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் டி பாவ் வின்செனட் தலைமையில் இந்த சமீபத்திய அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது. அவர் இதுகுறித்துப் பேசுகையில், 'ஆர்ஐ.ஆர்.எஸ் சிகிச்சையில் பல படிநிலைகள் உண்டு. அதன்படி, நோயாளியின சிறுநீரகத்தை நோக்கி யூரிட்டராசகோப் எனும் நுண்ணிய நெகிழ்தன்மையுடைய கருவி செலுத்தப்படும். இது சிறிய கேமரா, சிறு விளக்கு ஆகியவற்றை உள்ளடக்கிய மெலிதான சாதனம். இது, சிறுநீர்ப்பாதை, சிறுநீர்ப்பை வழியாக சிறுநீரகத்துக்கு செலுத்தப்படுகிறது.மேலும் அவர் பேசும்போது, 'ஆர்.ஐ.ஆர் எஸ் முறையின் சிறப்பு என்னவென்றால் இதில் உடலைகீறி சிகிச்சை செய்யப்படுவதில்லை என்பதுதான் மேலும் இரத்த கசிவு சிறிய தொந்தரவுகளுக்கான வாய்ப்பு இதில மிகவும் குறைவு இச்சிகிச்சை பெற்றவர் சிகிச்சை முடித்த மறுநாளே பணிக்கு சென்றுவிடலாம். எனவே, இது வாதியான அதே நேரத்தில் உடலில் மிகக்குறைவான ஊடுவவைச் செய்யக்கூடிய சிகிச்சை முறையாக இருக்கிறது என்றார்

இந்நிகழ்வில் சிறுநீரகவியல் துறையின் தலைவரும் முதுநிலை மருத்துவர் ஆர்.ரவிச்சந்திரன், அத்துறையின் முதுநிலை மருத்துவர் வேணுகோபால் கொனாகி மயக்கவியல் மற்றும் வலிநீக்கியல் துறையின் முதுநிலை மருத்துவர் ஞ்.கண்ணன் மற்றும் மார்க்கெட்டிங் துறையின் பொது மேலாளர் சிவகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

# ‘நீட் மட்டும்தானா? அதைத் தாண்டியும் உலகம் இருக்கு!’ மாணவர்கள் மத்தியில் விஜய் பேச்சு



மாமல்லபுரம்: மே.31-

“நீட் மட்டும்தான் உலகமா? நீட்டை தாண்டியும் உலகம் இருக்கு. அது ரொம்ப பெருசு” என தவெக தலைவர் விஜய் பேசியுள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 10, 12ம் வகுப்புகளில் சிறந்த மதிப்பெண் எடுத்த மாணவர்களுக்கு பரிசு வழங்கி கவுரவிக்கும் விழா இன்று மாமல்லபுரத்தில் உள்ள தனியார் விடுதியில் நடக்கிறது. இந்த விழாவில் முதற்கட்டமாக 88 தொகுதிகளைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்த நிகழ்வில் மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி பேசிய தவெக தலைவர் விஜய், ‘இளம் தலைவர்களுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் வணக்கம். உங்க எல்லாரையும் சந்தித்ததில் பெரிய மகிழ்ச்சி. உங்கள் எல்லாருக்கும் முதலில் வாழ்த்துகள். படிப்பில் சாதிக்கணும் என்பது முக்கியம்தான். அதுக்குன்னு ஒரே ஒரு படிப்புல மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுத்து படிச்சு அதுல மட்டும் சாதிக்கணும்னு அழுத்தம் ஏத்திக்க தேவை இல்லை. நீட் மட்டும்தான் உலகமா? நீட்டை தாண்டியும் உலகம் இருக்கு. அது ரொம்ப பெருசு. அதுல நீங்க சாதிக்க நிறைய விஷயங்கள் இருக்கு.

ஜனநாயகத்தோடு இருங்க. ஜனநாயகவாதியா இருந்தாதான் சுதந்திரமா இருக்க முடியும். உங்க வீட்ல இருக்க எல்லார்க்கிட்டயும் அவங்க ஜனநாயகக் கடமையை சரியா செய்ய சொல்லுங்க. ஜனநாயக கடமையை சரியாக செய்வது ரொம்ப எளிமையான விஷயம்தான். அதாவது நல்லவங்க, நேர்மையானவங்க, இதுவரைக்கும் ஊழல் பண்ணாத நல்லவங்கள நம்பிக்கையானவங்கள தேர்வு செய்ய சொல்லுங்க.

ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி இதே நிகழ்வுல, ஓட்டுக்கு பணம் வாங்கக்கூடாது, அந்த கலாச்சாரத்தை ஊக்குவிக்காதீங்கன்னு பெற்றோரிடம் சொல்லுங்க என்று சொல்லியிருந்தேன். அதை அப்படியே இப்பவும் பின்பற்றுங்க. ஆனா, நீங்களே பாருங்க. அடுத்த வருஷம் வண்டி வண்டியா பணத்தை கொண்டு வந்து கொட்ட போறாங்க. அது எல்லாமே உங்கக்கிட்ட இருந்து கொள்ளையடிச்ச பணம் அது. நீங்க என்ன பண்ண போறீங்க. என்ன பண்ணணும்னு உங்களுக்கு சரியா தெரியும்.

பெற்றோருக்கு ஒரு வேண்டுகோள். உங்க குழந்தைகள் மேல எந்த அழுத்தத்தையும் போடாதீங்க. அவங்களுக்கு என்ன பிடிக்குதுன்னு தெரிஞ்சு வழிநடத்துங்க. எத்தனை தடைகள் வந்தாலும் அவரவருக்கு பிடித்த துறைகளில் நிச்சயம் சாதித்து காட்டுவார்கள். சாதி மதத்தை வைத்து பிரிவினையை வளர்க்கிற சிந்தனை பக்கம் போய் விடாதீர்கள். விவசாயிகள் என்ன சாதி மதம் பார்த்தா விதைக்கிறாங்க? தொழிலாளர்கள் சாதி மதம் பார்த்தா தொழில் செய்கிறார்கள். இயற்கையோட வெயில் மழைல சாதி இருக்கா?. போதைப்பொருள் போல சாதி மதத்தையும் தூரமாக தள்ளிவைக்க வேண்டும்.

இப்போது பெரியாருக்கே சாதி சாயம் பூச முற்படுகிறார்கள். ஒன்றிய அரசின் சிவில் சர்வீஸ் தேர்வில் பெரியாருக்கு சாதி சாயம் பூசுவது போல கேள்வி கேட்டுள்ளார்கள். இந்த உலகில் எது சரி எது தவறு என யோசித்தாலே குழப்பம் இல்லாத வாழ்க்கையை வாழலாம். எதுக்கும் ரொம்ப எமோஷனல் ஆகாதீங்க. டெக்னிக்கல் மற்றும் அறிவியல் அப்ரோச் உடனே வாழ்க்கையை எதிர்கொள்ளுங்கள். ஏஐ தொழில்நுட்பத்தை எதிர்கொள்ள அதுவே ஒரே வழி” என்றார்.

# மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் கடந்த ஜூலை மாதம் திறந்து வைக்கப்பட்டதிலிருந்து இதுவரை 17,83,947 பொதுமக்கள் நூலகத்தைப் பயன்படுத்தியுள்ளனர் : பயனாளிகள் முதல்வருக்கு நன்றி






முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுக்காகவும், தமிழ் மொழிக்காகவும் தன்னை அர்ப்பணித்தவர். தொன்மை, கலை, நாகரிகம், பண்பாடு, இலக்கியம், அரசியல், ஆன்மிகம் போன்ற பல்வேறு அடையாளங்களைத் தாங்கி நிற்கும் மதுரையின் மற்றொரு பெருமையாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தன் வாழ்நாள் முழுவதும் புத்தகங்கள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த அன்னாரின் நினைவாக ரூ.218.19 கோடி செலவில் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நூலகம் 15.07.2023 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்டது.

மதுரை புதுநத்தம் சாலையில் பிரமாண்டமாக இந்த கலைஞர் நூற்றாண்டு நூலகம் செயல்பட்டு வருகிறது. 6 தளங்கள், குளுகுளு வசதி கொண்ட இந்நூலகத்தில் நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் வந்து பயனடைகின்றனர். இங்கு ஆண்டுதோறும் குழந்தைகளுக்கு கோடைகால பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மே 1ஆம் தேதி முதல் நடைபெற்று வரும் கோடைகால பயிற்சி முகாமில் ஏராளமான குழந்தைகள் ஆர்வமுடன் பயிற்சியில் பங்கேற்று வருகின்றனர்.

கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் கோடைகால பயிற்சி குறித்து நூலக அதிகாரிகள் கூறியதாவது:

”தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை பொது நூலக இயக்ககம் மற்றும் மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் குழந்தைகளுக்கான கோடைகால விடுமுறையை முன்னிட்டு குழந்தைகளுக்கான சிறப்பு கோடைகால பயிற்சி முகாம்கள் மே 1ஆம் தேதி முதல் மே 31ஷிஆம் தேதி வரை நடத்த திட்டமிடப்பட்டது. இந்த கோடைகால பயிற்சி முகாம் தொடங்கிய நாள் முதல் மே 20 ஆம் தேதி வரையில் 2 ஆயிரத்து 865 நபர்கள் பங்கேற்றுள்ளனர். மேலும், பெண்களுக்கான பயிற்சி பட்டறையில் 190 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

கோடைகால பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட முதல் நாள் ஏராளமான குழந்தைகள் ஆர்வமுடன் பங்கேற்று பயனடைந்து வருகின்றனர். இந்த பயிற்சி கொண்டாட்டத்தில்

பாரம்பரிய பல்லாங்குழி ஆட்டம், ஜோடிப்புறா, நா பிறழ் வார்த்தைகள், விடுகதைகள், மியூசிக்கல் தெரபி, பலூன் சிற்பங்கள் செய்தல், கீற்றுக்கலை, அபாகஸ் பயிற்சி, வேடமிட்டு கதை சொல்லுதல், பாரம்பரிய விளையாட்டு, தோல்பாவை சுத்து, கைப்பேசி புகைப்பட பயிற்சி, ஓவிய பயிற்சி, நாடகப் பயிற்சி, ஒயிலாட்டப் பயிற்சி, சதுரங்கப் பயிற்சி என பல்வேறு பயிற்சி பட்டறைகளை நடத்தி அதற்கான சான்றிதழ்களையும் வழங்கி வருகிறோம். இந்த கோடைகால கட்டணமில்லா தமிழ்நாடு அரசின் பயிற்சி பட்டறை பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

குளுகுளு நூலகத்தினை குழந்தைகளும், பெற்றோர்களும் குடும்பத்துடன் வந்து பார்வையிட்டு பெரிதும் பயனடைந்து செல்கின்றனர். கலைஞர் நூற்றாண்டு நூலகம் கடந்த ஜூலை மாதம் திறந்து வைக்கப்பட்டதிலிருந்து இதுவரை 17 இலட்சத்து 83 ஆயிரத்து 947 நபர்கள் நூலகத்தைப் பயன்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது” என்று தெரிவித்தனர். மேலும், பள்ளிக் குழந்தைகளின் நலனில் அக்கறை கொண்டு இத்தகைய பயிற்சி முகாமினை வருடந்தோறும் தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை பொது நூலக இயக்ககத்தின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் வாயிலாக வழங்கி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான தமிழ்நாடு அரசிற்கு நன்றியை தெரவித்துக் கொள்வதாக நூலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் கோடைகால பயிற்சி குறித்து குழந்தைகளின் பெற்றோர்கள் கூறியதாவது:

”கலைஞர் நூலகத்தின் கோடைக்கால பயிற்சி வகுப்புகள் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது. குழந்தைகள் கோடைகால விடுமுறையில் வீட்டில் டிவியையும், செல்போனையும் பார்த்து நேரத்தை வீணாக போக்குவார்கள். தற்போது இந்த பயிற்சி பட்டறையில் குழந்தைகளின் மனதிற்கும், உடலுக்கும் சிறந்த முறையிலான பயிற்சியை இலவசமாக அளித்து வருகின்றனர்.

பயிற்சி வகுப்புகள் பயனுள்ளதாக இருக்கிறது. குழந்தைகள் பயனுள்ளதாக கோடை விடுமுறையை பயன்படுத்தி வருகின்றனர். கோடை விடுமுறையை பள்ளி குழந்தைகள் பயனுள்ளதாக ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் இத்தகைய பயிற்சியை தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை பொது நூலக இயக்ககத்தின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் வாயிலாக வழங்கி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான தமிழ்நாடு அரசிற்கு எங்களுடைய சார்பாகவும், எங்கள் குழந்தைகளின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

தொகுப்பு

**இ.சாலி தளபதி எம்.ஏ.,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.

**ம.கயிலைச் செல்வம், பி.இ.,**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி), மதுரை.

# தமிழக அரசியல் கூட்டணிகளில் புதிய பரிணாமம்: காங்கிரஸ் புதிய தேர்வுகளுக்கு தயார்



சென்னை, மே.31-

தமிழகத்தில் திமுக கூட்டணி உறுதியாக அமைந்துள்ள நிலையில், அதிமுக தனது கூட்டணியை வலுப்படுத்தும் பணி செய்து வருகிறது. இதே நேரத்தில் காங்கிரஸ் கட்சியில் சத்தமின்றி ஒரு மாற்றம் காணப்படுவதற்கான சாத்தியங்கள் உருவாகி வருகின்றன. சென்னையில் நடைபெற்ற முக்கியக் கூட்டத்தில், திமுக குறைந்த தொகுதிகளை வழங்கும் சூழ்நிலையில் தமிழக வெற்றிக் கழகத் துடன் கூட்டணி அமைக்கலாம் என காங்கிரஸ் நிர்வாகிகள் வலியுறுத்தியதாக கூறப்படுகிறது.

இந்த சந்திப்பில், காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் நேரடியாக, “திமுகவை விட்டுவிட்டு ஏன் புதிய கூட்டணியை முயற்சி செய்யக் கூடாது?” என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கிறார். கடந்த எட்டு ஆண்டுகளாக திமுக கூட்டணியில் உள்ள காங்கிரஸ், போதுமான அரசியல் ஆதிக்கம் இல்லாமையே இந்த மாற்றத்தின் காரணம் என கூறப்படுகிறது.

அதிமுக பக்கம் பார்ப்பதற்கு, பல கட்சிகளை இணைக்கும் முயற்சி தீவிரமாக நடக்கிறது. அதிமுக, பாஜக, தேமுதிக, பாமக ஆகியவை ஒரு கூட்டு இயக்கமாக வர முயல்கின்றன. அதே நேரத்தில் நாம் தமிழர் கட்சி தனிப்பட்ட அணியாக போட்டியிட இருப்பதை அறிவித்துள்ளதால், தமிழகத்தில் நான்கு மூலைப் போட்டி நிலை உருவாகி இருக்கிறது.

இந்த சூழ்நிலையில் விஜய்யின் தமிழக வெற்றி கழகம் ஒரு புதிய பரிமாணமாக அரசியலுக்குள் வந்துள்ளது. இளைஞர்கள் மற்றும் பெண்கள் மத்தியில் விஜய்க்கு பெரும் ஆதரவு இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் மாநிலளவில் அவரது கட்சி எந்த அளவு செல்வாக்கு பெறும் என்பது இன்னும் தெளிவாகவில்லை.

திமுக கூட்டணிக்குள்ளும் குழப்பம் அதிகரித்து வருகிறது. சில கட்சிகள் அதிக சீட்டுகள் மற்றும் அதிகாரப் பங்கு கேட்டு வர, விடுதலை சிறுத்தைகள் போன்றவை தங்களது தலைவர் திருமாவளவனை முதலமைச்சர் வேட்பாளராக போஸ்டர் ஒட்டும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் மத்தியில், பல ஆண்டுகளாக போராடிய காங்கிரஸ் நிர்வாகிகள் தவிர்க்கப்பட்டு, சில முக்கிய குடும்பங்களுக்கே சீட்டுகள் வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. இதனால் பல மாவட்டங்களில் காங்கிரஸ் இன்னும் ஒரு முறையும் போட்டியிட வாய்ப்பு இல்லாமல் தவிக்கிறது.

திமுக கூட்டணியில் தொடர வேண்டுமா அல்லது புதிய கூட்டணியுடன் வரவேண்டுமா என காங்கிரசுக்கு உள்கட்சி பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன. இந்த விவகாரத்தில், தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி அமைப்பது ஒரு திடீர் எண்ணமாக எழுந்துள்ளது.

கிரிஷ் சோடங்கர் தலைமையில் நடைபெற்ற கூட்டங்களில், “விஜய் ஒருபோதும் காங்கிரஸை விமர்சித்ததே இல்லை. அவருடன் புதிய கூட்டணி அமைப்பது சாத்தியம்தான்” என்ற கூற்று முக்கியமாக பேசப்பட்டதாக தெரிகிறது.

திமுக கூட்டணியில் இருந்து வெளிவந்து, தவெகவைத் தளமாக வைத்து சட்டமன்றத் தேர்தலை சந்திப்பது குறித்து கட்சி மேலிடம் பரிசீலனை செய்து வருகிறது. இது தமிழக அரசியலில் புதிய மாற்றத்துக்கான தொடக்கமாக அமையக்கூடும்.



■ திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வில்பட்டி பஞ்சாயத்துக்கு உட்பட்ட பிழாக்கவி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் சில மாதங்களாகவே அனுமதி இன்றி மரங்கள் வெட்டி கடத்தப்படுகிறது யூக்காளி பட்டஸ் மரங்கள் கனரக வாகன மூலம் கேரளாவுக்கு எடுத்து செல்கிறார்கள்அதன் விலை பல லட்சம் என்று சொல்லப்படுகிறது அனுமதியின்றி வெட்டப்படும் மரங்கள் வனத்துறை அதிகாரிகள் உடந்தையாக இருப்பதாக சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டுகின்றனர் எனவே அரசுக்கு வரும் வருவாய் தடுக்கப்படுகிறது எனவே மரங்கள் வெட்டுவதற்கு முறைப்படுத்த வேண்டும் அனுமதி இல்லாமல் வெட்டப்படும் நபர்கள் மீது வனத்துறை கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் எதிர்பார்ப்பு



# காரைக்குடி கோயில் திருவிழாவில் பக்தர்கள் கத்தி போட்டு நேர்த்திக்கடன்

காரைக்குடி, மே.31-

காரைக்குடி கோயில் திருவிழாவில் பக்தர்கள் உடலில் கத்தி போட்டு நேர்த்திக்கடன் செலுத்தினர். சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நா.புதூர் வீரையன் கண்மாய் நாகலிங்கம் தெருவில் ராமலிங்க சவுண்டேஸ்வரி கோவில் உள்ளது. இங்கு கடந்த 20ம் தேதி காப்புக்கட்டுதலுடன் 101ம் ஆண்டு சக்தி கரக மகோத்சவ பொங்கல் விழா தொடங்கியது. இதை தொடர்ந்து 26ம் தேதி புனித நீராடல், 27ம் தேதி பால்குடம் எடுத்து பக்தர்கள் நேர்த்திகடன் செலுத்தினர். இதையொட்டி சக்தி கரகம் கோவிலுக்கு வந்து ரத்தி சேர்த்தல் என்னும் கத்தி போடுதல் நிகழ்ச்சி நேற்று காலை தொடங்கியது.

முத்தாலம்மன் கோவிலில் இருந்து சக்தி கரகம் நகரின் முக்கிய வீதி வழியாக ஊர்வலம் வந்து பாப்பா ஊருணி பகுதியில் உள்ள கோயிலை வந்தடைந்தது. இந்த ஊர்வலத்தில் ஏராளமான இளைஞர்கள் தங்களது உடலில் கத்தி போட்டு நேர்த்திக்கடன் நேர்த்திக்கடன் செலுத்தினர். இதை தொடர்ந்து இரவு முளைப்பாரி அம்மன் திருவீதி உலா நடந்தது. இன்று காலை 5 மணிக்கு கரகம், முளைப்பாரியை செஞ்சை ஊரணியில் கரைத்தல், காலை 6 மணிக்கு கோவிலில் மஞ்சள் நீராட்டு உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# ஜூன் 2025ம் மாதத்தில் தவறாது சேர்த்து, குழந்தைகள் மையங்களில் நடைப்பெற்று வரும் குழந்தைகளுக்கான ஆதார் அட்டை வழங்கும் சேவையையும் பயன்படுத்திக் கொண்டும் பயன்பெறலாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தகவல்

சிவகங்கை, மே.31-

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மூலம் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியினை மேம்படுத்தும் பொருட்டு, மாவட்டத்தில் செயல்படும் 1,552 குழந்தைகள் மையங்களிலும் சத்துமாவு, ஊட்டச்சத்துடன் கூடிய கலவை உணவு மற்றும் முன்பருவக் கல்வி போன்றவை வழங்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக, 2 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு, குழந்தைகள் மையத்தில் ”முறைசாரா முன்பருவக் கல்வி” செய்கைப் பாடல், கதை, விளையாட்டுக் கல்வி உபகரணங்கள் ஆகியவற்றின் வாயிலாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில், குழந்தைகளின் உடல், மொழி, மனம், சமூகம் மற்றும் அறிவு வளர்ச்சிக்கு தேவையானவற்றை, ஆடிப்பாடி விளையாடு பாப்பா எனும் சிறப்பு பாடத்திட்ட திருப்புதலுடன் 12 மாதங்களுக்கும் நடைமுறை படுத்தப்படுகிறது. மேலும், குழந்தைகளின் வளர்ச்சி கண்காணிக்கப்பட்டு பள்ளி செல்லவும் ஆயத்த படுத்தப்படுகின்றனர்.

மேலும், அங்கன்வாடி பணியாளர்கள் தற்போது வீடுகள்தோறும் குழந்தைகள் சேர்க்கை பணி மேற்கொண்டு வருகிறார்கள். எனவே, பெற்றோர்கள் தங்களது 2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளை வருகின்ற ஜூன் 2025ம் மாதத்தில் குழந்தைகள் மையத்தில் தவறாது சேர்த்திடவும், குழந்தைகள் மையங்களில் குழந்தைகளுக்கான ஆதார் அட்டை வழங்கும் பணியும் நடைப்பெற்று வருவதால், அச்சேவையையும் பயன்படுத்திக் கொண்டும் பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161